DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 412/2017 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 5 |
| Name | : ராஜபாண்டி. |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.03.2024.

- - - - - - -

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை:</u>

நான் உசிலம்பட்டி நேதாஜி நகரில் குடியிருந்துவருகிறேன். ஆஜர் எதிரிகள் 4 பேர்களில் பாண்டியராஜன் ஒருவரை மட்டும் தெரியும். கடந்த 30.08.2015 இல் நான் பேரையூரிலிருந்து நண்பரோடு காரில் வந்து எழுமலை பிரிவில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது ப்ரேம், பாஸ்கரன் ஆகிய போலிசார் பாதுகாப்புப் பணியிலிருந்தனர். அவர்கள் இருவரிடமும் நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். அந்த சமயம் 4 பேரும் பைக்கில் வந்து அவர்களோடு சத்தம் போட்டனர். பதிலுக்கு பாஸ்கரும், பிரேமும் சத்தம் போட்டார்கள். அப்போது இவர்களுக்கும், போலிசாருக்கும் கைகலப்பாகிவிட்டது. அப்போது எதிரிகள் 4 பேரும் மப்டி ட்ரெசில் 2 போலிசார் இருந்ததால் அவர்கள் போலிசார்

என்று தெரியாமல் சத்தம் போட்டுவிட்டோம் என்று சொன்னார்கள். நான் விலகிவிட்டு சென்றுவிட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை -

போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்றே விசாரித்தார்கள். இந்த வழக்கில் புகார்தாரரும், பாஸ்கரன் என்பவரும் கணவாய் கேட் அருகே நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்து நானும் எனது நண்பர்களும் இறங்கிப் பேசினோம். மேற்படி விபரத்தை போலிசார் விசாரிக்கும்போது சென்னேனா என்றால் சொன்னேன். நான் முதல் விசாரணையில் சாட்சியம் கூறியதுபோன்றுதான் போலிசாரிடம் சொன்னேன் என்றால் சரிதான்.

ஒப்பம் / P.S. ரஸ்கின் ராஜ், 01.03.2024.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.